## என்.டி.ஏ.வால் இதுவரை ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகள் எத்தனை?

# தேர்வர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் என்ன?

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



**புதுடெல்லி, ஜூலை 28-**

**என்.டி.ஏ.வால் இதுவரை ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகள் எத்தனை? தேர்வர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் என்ன? என்று மக்களவையில் மக்களவை கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வி அமைச்சர் பதில் அளித்துள்ளார்.**

**இது பற்றிய விவரம் வருமாறு:-**

தேசிய தேர்வு முகமை தொடங்கப்பட்டதிலிருந்து (என்.டி.ஏ.) கடந்த ஏழு ஆண்டுகளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு பின் ஒத்தி வைக்கப்பட்ட தேர்வுகள் எத்தனை? ஆண்டு வாரியாக விவரங்கள் தேவை என்றும், தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் அது ஒத்திவைக்கப்படுவதைத் தடுக்க என்.டி.ஏ. எடுத்த நடவடிக்கைகள் மற்றும் தொலைதூர இடங்களில் ஒதுக்கப்படும் மையங்கள் மற்றும் வெவ்வேறு மையங்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு போதுமான உள்கட்டமைப்புகள் இல்லாதது குறித்து மாணவர்கள் எழுப்பும் புகார்கள் குறித்து என்.டி.ஏ. அறிந்திருக்கிறதா என்றும்,

அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? மேலும் தேர்வர்களின் புகார்களை, குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் என்னென்ன?” என்றும் தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் டாக்டர் இராணி ஸ்ரீகுமார் ஆகியோர் எழுத்துப்பூர்வமாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பினர்.

**இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர். சுகந்த மஜூம்தார் எழுத்துபூர்வமாக அளித்த பதில் வருமாறு:-**

“தேசிய தேர்வு முகமை கடந்த 2018-இல் தொடங்கப்பட்டதிலிருந்து 5.4 கோடிக்கும் அதிகமான மாணவர்களை உள்ளடக்கிய 240 தேர்வுகளை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றது.

NTA ஆல் நடத்தப்படும் பெரும்பாலான தேர்வுகள் பல்வேறு பாடங்களில், பல்வேறு கால முறைகளில், பல கால இடைவெளிகளில் நடத்தப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் எதிர்பாராத, இதற்கு முன் நடந்திராத கோவிட் தொற்று போன்ற சூழ்நிலைகள், தொழில் நுட்பக் கோளாறுகள், தளவாட பற்றாக்குறை, நிர்வாக சிக்கல்கள், அரசு ஆணைகள் போன்ற நிலைகளில் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதன்படி... 2020, 2021 ஆண்டுகளில் கோவிட் தொற்று ஊரடங்கு காரணமாக JEE, NEET, CSIRUGC NET, ICAR AIEEA, DUET, AIAPGET, JIPMAT ஆகிய தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டன. 2021 CMAT தேர்வு AICTE தேர்வு திட்டத்தை மாற்றியமைத்ததால் ஒத்தி வைக்கப்பட்டது.

மேலும் 2022 இல் இந்திரா காந்தி திறந்த நிலை பல்கலைக்கழக பி.ஹெச்.டி. நுழைவுத் தேர்வு நிர்வாகக் காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டது. 2023 GATB, BET ஆகிய தேர்வுகள் மண்டல தேர்வு மையங்களுடனான ஆலோசனைக்குப் பின் ஒத்தி வைக்கப்பட்டது.

NCET 2024 தேர்வு தொழில் நுட்பக் காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டது.

CSIR NET 2024 தேர்வு தளவாட பிரச்சினைகள் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது.

தற்போது பெரும்பாலான தேர்வுகளுக்கான தேர்வு நாட்காட்டியை முன்னதாகவே என்.டி.ஏ. அறிவிக்கத் தொடங்கியிருக்கிறது. இது தேர்வர்களின் வசதிக்காக செய்யப்படுகிறது. என்டிஏவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகள், மறுஅட்டவணைகள் / ஒத்திவைப்புகளுக்கு இடமளிக்கும் இடைக்கால நாட்களைக் கருத்தில் கொண்டு தேர்வு நாட்காட்டி திட்டமிடப்பட்டுள்ளது.

என்.டி.ஏ. நடத்தும் தேர்வுகளை எழுதுபவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்களின் முன்னுரிமையை கருத்தில் கொண்டும், ஒவ்வொரு தேர்வு மையத்தில் உள்ள இடங்களின் அளவை கருத்தில் கொண்டும் தேர்வு மையங்கள் கணினி மென்பொருள் மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

பெரும்பாலும் தேர்வு எழுதுபவர்கள் தேர்ந்தெடுத்த நகரத்துக்குள் ஒரு தேர்வு மையம் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சில சமயங்களில் தேர்வு எழுதுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவர்களால் தேர்வு செய்யப்பட்ட நகரத்துக்குள் தேர்வு மையம் அளிக்கப்பட முடியாமல் போகலாம்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், NTA அவர்களை அருகிலுள்ள இடங்களில் தங்க வைக்க முயற்சிக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு மையங்களை ஒதுக்கும் போது, உள்கட்டமைப்புகள் அவர்கள் பயன்படுத்தும் வகையில் இருப்பதை உறுதி செய்ய உரிய கவனம் செலுத்தப்படுகிறது.

விண்ணப்பதாரர்களின் புகார்கள்/குறைகள் மின்னஞ்சல்கள் மற்றும் ஹெல்ப் டெஸ்க் தொலைபேசி எண்கள் மூலம் பெறப்படுகின்றன. அவை முறையாகத் தீர்த்து வைக்கப்படுக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார் ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர். சுகந்த மஜூம்தார்.

ஒன்றிய அரசின் பதிலுரையில் என்.டி.ஏவால் தற்போது நிறுத்திவைக்கப்பட்ட பெரும்பாலான தேர்வுகள் இடம்பெறாமல் இருப்பது அரசு தேர்வு முறைகளில் மேலும் சந்தேகத்தையும் மாணவர்களின் எதிர்காலம் மீது அரசின் அலட்சியப் போக்கையும் சுட்டிக்காட்டுகின்றது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (26.7.2024) தலைமைச் செயலகத்தில், Rubiks Cube விளையாட்டுப் போட்டியில் Asia Records, India Book of Records, Ingenious Charm World Records போன்ற பல்வேறு சாதனைகளை படைத்தமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை செல்வி எம். லக்ஷிதா காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது தாய் திருமதி ஏ.மோனிஷா, சகோதரர் செல்வன் ஆனந்த் மற்றும் பயிற்சியாளர் செல்வி பிந்து பிரியங்கா ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் - தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன

# மாணவர்களின் “கலர்ஸ் ஆப் கோலிவுட்” குறும்படம்!

## 16-வது சர்வதேச ஆவணம் - குறும்படப் போட்டிக்குத் தேர்வு!




*சென்னை, ஜூலை 28-*

*16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டியில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் “கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி” (Colours of Kollywood A Melanin Deficiency) என்ற ஆவண குறும்படம் திரையீட்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.*

*16வது சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டி கேரளாவில் 26 ஜூலை 2024 முதல் 31 ஜூலை 2024 வரை நடைபெற்று வருகிறது. இந்த சர்வதேச ஆவணம் மற்றும் குறும்படப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைக்கலைஞர்கள் இந்திய அளவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து எண்ணற்ற குறும்படங்கள் போட்டியிட்டனர்.*

*இதில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த இளங்கலை காட்சிக் கலை (Bachelor of Visual Arts) மாணவியான செல்வி.பரோசலில் இயக்கிய ஆவண குறும்படம் “கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி” (Colours of Kollywood A Melanin Deficiency), 22 ஆவண குறும்படங்களில் ஒன்றாக திரையீட்டிற்காக அதிகாரப்பூர்வ பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த கலர்ஸ் ஆஃப் கோலிவுட் எ மெலனின் டெஃப்ஷியன்சி ஆவணப் படம் வெள்ளை சருமத்தில் மீதான விருப்பம் இந்தியர்களின் ஆழ்மனதில் பதிந்துள்ளது, தமிழ் சினிமாவும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களுடனான உரையாடல் மூலம் இந்த ஆவணப்படம் இதை ஆய்வு செய்கிறது. குறிப்பாக தமிழ் நடிகைகள் குறித்தும் இந்த ஆவணப்படம் பேசுகிறது.*

*இந்த ஆவணக்குறும்படத்தில் தேசிய விருது பெற்ற இயக்குநரான க. ஹரிஹரன், விளம்பர திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் புகைப்படக் கலைஞர் நரேஷ் நில், சர்வதேச விருது பெற்ற நடிகை மியா மெல்சர் மக்கள் தொடர்பாளரான செல்வி. கவிதா இம்மானுவேல், ஜே.என்.யூ. மாணவியான செல்வி ஹருஷிக்கா, திரைப்பட இயக்குநர் மற்றும் விரிவுரையாளர் மணி ஷங்கர் நாராயணன் உள்ளிட்ட பலர் தங்களது கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.*

*இந்த ஆவணக்குறும்படத்தை இந்நிறுவன மாணவர்களான செல்வி பரோசலில் இயக்கியுள்ளார். ஒளிப்பதிவை செல்வன் அக்ஷய் பரூனோன் என்பவரும், ஆடியோகிராப்பியை சுப்பிரமணியபாரதி என்பவரும், படத்தொகுப்பை செல்வன் கோபிகிருஷ்ணன் என்பவரும் எண்மிய இடைநிலை பணிகளை செல்வன் அருண்ராஜ் என்பவரும் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பணிகளை செல்வின் தக்ஷின் என்பவரும் கையாண்டுள்ளனர்.*

*இந்த ஆவணக்குறும்படத்தினை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தயாரித்ததாகும்.*

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் “மக்களுடன் முதல்வர்” திட்டம்!

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் தொடங்கி வைத்தார் !

*கிருஷ்ணகிரி, ஜூலை 28 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகப் பகுதிகளுக்கான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருவதைத்தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமையில் மக்களுடன் முதல்வர் திட்ட தொடக்க நிகழ்வு நடைபெற்றது.*

*கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதி, போச்சம்பள்ளி ஒன்றியம், புளியம்பட்டி கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமையில் பொது மக்களிடம் மனுக்களை பெறும் முகாம் நடைபெற்றது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வண்ணம் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை முதற்கட்டமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தொடங்கி நடைபெற்று வந்ததை தொடர்ந்து நகர்ப்பகுதிகளில் இந்தத் திட்டத்திற்கு கிடைத்த வெற்றி மற்றும் வரவேற்பினையடுத்து இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரகப் பகுதிகளுக்கான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை அறிமுகப்படுத்தி தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி, போச்சம்பள்ளி ஒன்றியம், புளியம்பட்டி கிராமத்தில் முகாம் அமைக்கப்பட்டு காலை 10.00 மணி முதல் மாலை 3.00 வரை பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படடன. இந்த முகாம்களில் 16 துறைகள் மூலமாக பெறப்படும் மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.*

*இந்தநிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சாந்த மூர்த்தி , குணவசந்தரசு , அறிஞர் , ரஜினி செல்வம் மாவட்ட கவுன்சிலர்கள் கதிரவன் , சங்கர் ,ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் , ஜெயவேல் , மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*

## என்.இளையராஜா தலைமை! எஸ்.டேனியல்சத்தியா ஏற்பாட்டில்! பி.என்.கார்த்தி வரவேற்புரை!

# கழக இளைஞர் அணி சார்பில் திருக்குவளையில் கலைஞர் நூலகம்!

## என்.கௌதமன் திறந்து வைத்தார்!

*நாகை, ஜூலை 28-*

*நாகை மாவட்டம் திருக்குவளையில் கலைஞர் நூலகத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்தார்.*

*தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதியிலும் கலைஞர் நூலகம் அமைக்க வேண்டும் என கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தர விட்டார். இதையடுத்து கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் வழிக்காட்டுதலின்படி நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி திருக்குவளை கடைத் தெருவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.டேனியல்சத்தியா ஏற்பாட்டில் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாவிற்கு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி வரவேற்றார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ். டேனியல்சத்தியா, கே.சுரேஷ், பன்னீர்செல்வம், டி.கலையரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலைஞர் நூலகத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்தார்.*

*விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல. மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ. தாமஸ்ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இல. பழனியப்பன், கோசி.குமார், தலைஞாயிறு ஒன்றியக் குழு தலைவர் ஆர்.ஜி.தமிழரசி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வி.எம். கே.பாலாஜி. ஜோதிபாசு, செந்தில், பி.தியாகராஜன், குவளைகணேசன், சண்முகநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் சுதாஅருணகிரி, கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய மாவட்ட பிரதிநிதி சி.வீரமணி, கீழையூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் பார்த்திபன், எஸ்.குமார், சுரேஷ், மற்றும் பாஸ்கர், ரமணி, குமார், ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் கார்த்தி, மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

## திருவாரூர் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர்

# தாஜுதீன் தாயார் ரோஷன் அம்மையார் மறைவு!

## பூண்டி கலைவாணன் - கழகத்தினர் அஞ்சலி!

*திருவாரூர், ஜூலை 28-*

*திருவாரூர் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் தாஜுதீன் அவர்களின் தாயார் ரோஷன் அம்மையார் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*மறைந்த ரோஷன் அம்மையார் நீதித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் காவல் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற இக்பால் அவர்களின் மனைவி ஆவார். ரோஷன் அம்மையாருக்கு எம்.ஐ.ஆர். தாஜுதீன், எம்.ஐ.ஆர். கபூர்தீன் என்கிற இரண்டு மகன்கள் உள்ளனர்.*

*இதில் எம்.ஐ.ஆர். தாஜுதீன் திருவாரூர் மாவட்ட தி.மு.க. சிறுபான்மைப்பிரிவு அமைப்பாளர் ஆவார்.*

*திருத்துறைப்பூண்டி ஆட்டூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த ரோஷன் அவர்களின் உடலுக்கு, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.*

*அம்மையாரின் இறுதி ஊர்வலம் 26.07.2024 வெள்ளிக்கிழமையன்று காலை 10.00 மணி அளவில் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்று, ரயிலடி பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*




விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் அ.சிவா வெற்றிக்கு உழைத்திட்ட கழகத்தினருக்கும் கூட்டணி கட்சியினருக்கும் நன்றி தெரிவிக்கும் “இந்தியா” கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ( ம ) செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச்செயலாளர், அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமமூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் ஏ.வி.சரவணன், உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டணி கட்சிகளின் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு திருமயத்தில் கலைஞர் நூலகத்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் இளையராஜா திறந்து வைத்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா. தமிழ் ராசு, அருண் சேகர், இளையராஜா, கவிக்குமார், நசுருதீன், முகம்மது ரபீக், ஒன்றிய செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், இரா.கணேசன், வி.ஆர். இளையராஜா, அ.முத்து, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மேகநாதன், கே.ஆர். ராமசாமி மற்றும் சீமானூர் கணேசன், ராஜமாணிக்கம் உள்ளிட்ட திருமயம் வடக்கு, தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.